முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி

**முன்னிலை :– திரு.J.ராஜேஷ்குமார், எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**,

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீகுரோதி வருடம்

கார்த்திகை திங்கள், 21ம் நாள்

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.308/2023**

1. ரவிக்குமார்
2. மாரியம்மாள் – வாதிகள்

எதிர்

1. சுப்பிரமணியன்
2. வள்ளி
3. பொன்னுக்குட்டி
4. பிரேமா
5. சுடலைமுத்து –பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இறுதியான விசாரணைக்காக 05.12.2024 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ராஜ்மகேந்திரன் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜன்ஆசிர்வாதம் அவர்களும் முன்னிலையாகி பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்பு அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல், அழைத்தும் ஆஜராகாத நிலையில் பிரதிவாதிகளை ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், வாதிகள் தரப்பு சாட்சியம், ஆவணங்கள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும் வாதிகள் தரப்பு வாதுரையை கேட்டறிந்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

1ம் தபசில் சொத்து வாதிகளுக்குப் பாத்தியப்பட்டதென 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்வதன் மூலமாக 1வது தபசில் சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள

கட்டுமானங்களை நீதிமன்றம் குறிப்பிடும் ஓர் தினத்திற்குள் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இடித்து அப்புறப்படுத்தி வாதிகளிடம் 1 வது தபசில் சொத்தின் அடிமனை அனுபவத்தினை ஒப்படைத்துப்போக உத்தரவிட்டும் அவ்வாறு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் செய்து போக தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலமாக 1 வது தபசில் சொத்தில் உள்ள கட்டுமானங்கள் முழுவதையும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் செலவில் அப்புறப்படுத்தி வாதிகளிடம் 1 வது தபசில் சொத்தின் அடிமனையை அனுபவம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க கோரியும்,

2 வது தபசில் சொத்து வாதிகளுக்குப் பாத்தியப்பட்டதென 3 ம்பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை செய்வதன் மூலமாக 2 வது தபசில் சொத்தில் 3 ம்பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டுமானங்களை நீதிமன்றம் குறிப்பிடும் ஓர் தினத்திற்குள் 3 ம் பிரதிவாதி இடித்து அப்புறப்படுத்தி வாதிகளிடம் 2 வது தபசில் சொத்தின் அடிமனை அனுபவத்தை ஒப்படைத்துப்போக உத்தரவிட்டும் அவ்வாறு 3 ம்பிரதிவாதி செய்து போக தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலமாக 2 வது தபசில் சொத்தில் உள்ள கட்டுமானங்கள் முழுவதையும் 3 ம் பிரதிவாதியின் செலவுல் அப்புறப்படுத்தி வாதிகளிடம் 2 வது தபசில் சொத்தின் அடிமனையை அனுபவம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கக்கோரியும்,

3 ம் தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென 5 ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை செய்தவன் மூலமாக 3 வது தபசில் சொத்தில் 5 ம்பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டுமானங்களை நீதிமன்றம் குறிப்பிடும் ஓர் தினத்திற்குள் 3 ம் பிரதிவாதி இடித்து அப்புறப்படுத்தி வாதிகளிடம் 3 வது தபசில் சொத்தின் அடிமனை அனுபவத்தை ஒப்படைத்துப்போக உத்ததரவிட்டும் அவ்வாறு 3 ம்பிரதிவாதி செய்து போக தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலமாக 3 வது தபசில் சொத்தில் உள்ள கட்டுமானங்கள் முழுவதையும் 5 ம் பிரதிவாதியின் செலவில் அப்புறப்படுத்தி வாதிகளிடம் 3 வது தபசில் சொத்தின் அடிமனையை அனுபவம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கக்கோரியும், வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. வழக்குரையின் சுருக்கம்

பிராது 4 ம்தபசில் சொத்தினை வாதிகள் கடந்த 20.11.2012 அன்று கிரையம் பெற்று கிரைய காலம் முதல் சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்து வருகிறார்கள். வாதிகள் பெயருக்கு பிராது 4 ம் தபசில்

சொத்திற்கு கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் கேரளா மாநிலம் வால்பாறை எஸ்டேட்டில் கூலி வேலை செய்து வருவதினால் 4ம் தபசில் சொத்தின் பாதுகாப்பு கருதி மேற்படி சொத்திற்கு தென்பக்கமாக முள்வேலி அமைத்தும், மேற்கு பக்கமாக காம்பவுண்ட் சுவர் கட்டியும் உள்ளனர். 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் 4ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியாகும்.

1 முதல் 3 தபசில் சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு யாதொரு பாத்தியமோ, உரிமையோ, அனுபவமோ கிடையாது. வாதிகள் வெளியூரில் வேலை பார்த்து வருவதினை பிரதிவாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 4ம் தபசில் சொத்தின் தென்பக்கம் கிழமேலாக அமைந்திருந்த முள்வேலியை உடைத்துவிட்டு 2ம் தபசில் சொத்தில் 3ம் பிரதிவாதியும், 3ம் தபசில் சொத்தில் 5ம் பிரதிவாதியும் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் கட்டியுள்ளனர். வாதிகள் தற்செயலாக ஊருக்கு வந்தபோதுதான் மேற்படி கட்டுமான விபரங்களும் அவற்றை பிரதிவாதிகள் 2022ம் ஆண்டில் கட்டியுள்ளதாகவும் வாதிகளுக்கு தெரிய வந்தது. ஆக்கிரமிப்பு கட்டுமானங்களை அப்புறப்படுத்தப்போகுமாறு 3 முதல் 5 பிரதிவாதிகளிடம் கேட்டு வந்த போது அகற்றிப்போவதாக வீண் புகல் சொல்லி நாட்களை கடத்தி வருகிறார்கள்.

1ம் வாதியின் தாயார் சீனியம்மாள் கடந்த 2023ம் ஆண்டு மார்ச் மாதம் கீழே விழுந்து வலது கை முறிவு ஏற்பட்டதினால் மருத்துவ சிகிச்சைக்காக வாதிகள் கேரளா மாநிலம் வால்பாறை சென்று சிறிதுகாலம் 1ம் வாதியின் தாயாருடன் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனை 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 1,2 பிரதிவாதிகளையும் தங்களுடன் சேர்ந்து கொண்டு 2 மற்றும் 3வது தபசில் சொத்துக்களுக்கு சேர்ந்தரணையாக 4ம் தபசில் சொத்தின் தென்பக்கம் கிழமேலாக அமைந்திருந்த முள்வேலியை உடைத்துவிட்டு 1,2 பிரதிவாதிகள் கடந்த 2023ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் தபசில் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து 1ம் தபசில் சொத்திலுள்ள கட்டுமானங்களை கட்டியுள்ளார். வாதிகள் தற்செயலாக ஊருக்கு வந்தபோதுதான் கட்டுமான விபரங்கள் வாதிகளுக்கு தெரிய வந்தது. பிரதிவாதிகளை வாதி நேரில் சந்தித்து 1 முதல் 3 தபசில் சொத்துக்களில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து சட்டவிரோதமாக கட்டியுள்ள கட்டுமானங்களை அப்புறப்படுத்திப் போகுமாறு கேட்டதில் பிரதிவாதிகள் வீண் புகல் சொல்லி வந்தனர். எனவே, பிரதிவாதிகளின் மீது 1ம் வாதி சாம்பவர்வடகரை காவல்நிலையத்தில் கடந்த 30.07.2023 அன்று புகார்

செய்தார். விசாரணையில் ஒரு மாத காலத்திற்குள் அப்புறப்படுத்திப் போவதாக கூறினார்கள். 3,4 பிரதிவாதிகள் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு 3ம்தபசில் சொத்தில் வீண் பாத்தியதை ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் 3ம் தபசில் சொத்தைப் பொறுத்து 4ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 03.03.2023 அன்று மோசடியாக ஒரு ஆவணத்தினை உற்பத்தி செய்து கொண்டுள்ளனர். வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் 1ம் தபசில் சொத்து H H1 G1 G எனவும் 2ம் தபசில் சொத்து G1 G F1 F எனவும் 3ம் தபசில் சொத்து F F1 D E எனவும், 4ம் தபசில் சொத்து A B C D E F G H எனவும் விவரிக்கப்பட்டுள்ளது. எனவே, வாதியால் பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் முன்னிலையான போதிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்பு அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அழைத்தும் ஆஜராகவில்லை. எனவே, பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

4. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வாதிகள் கோரியுள்ளவாறு இவ்வழக்கினை அனுமதித்து உத்தரவிட வேண்டுமா? என்பதேயாகும்.

5. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 2ஆம் வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடுசெய்யப்பட்டுள்ளன.

<u>6. தீர்வு</u>

வாதிகள் தரப்பில் வழக்குரையிலும், சாட்சியத்திலும் பிராது 4ம்தபசில் சொத்தினை வாதிகள் கடந்த 20.11.2012 அன்று கிரையம் பெற்று கிரைய காலம் முதல் சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்படி கிரைய பத்திரம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வாதிகள் பெயருக்கு பிராது 4ம் தபசில் சொத்திற்கு கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் 2ஆம் வாதி பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா வா.சா.ஆ,2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வாதிகள் கேரளா மாநிலம் வால்பாறை எஸ்டேட்டில் கூலி வேலை செய்து வருவதினால் 4ம் தபசில் சொத்தின்

பாதுகாப்பு கருதி மேற்படி சொத்திற்கு தென்பக்கமாக முள்வேலி அமைத்தும், மேற்கு பக்கமாக காம்பவுண்ட் சுவர் கட்டியும் உள்ளதாகவும், 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் 4ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியாகும் என்றும்

1 முதல் 3 தபசில் சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு யாதொரு பாத்தியமோ, உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றும், வாதிகள் வெளியூரில் வேலை பார்த்து வருவதினை பிரதிவாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 4ம் தபசில் சொத்தின் தென்பக்கம் கிழமேலாக அமைந்திருந்த முள்வேலியை உடைத்துவிட்டு 2ம் தபசில் சொத்தில் 3ம் பிரதிவாதியும், 3ம் தபசில் சொத்தில் 5ம் பிரதிவாதியும் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் கட்டியுள்ளனர் என்றும், வாதிகள் தற்செயலாக ஊருக்கு வந்தபோதுதான் மேற்படி கட்டுமான விபரங்களும் அவற்றை பிரதிவாதிகள் 2022ம் ஆண்டில் கட்டியுள்ளதாகவும் வாதிகளுக்கு தெரிய வந்ததாகவும், ஆக்கிரமிப்பு கட்டுமானங்களை அப்புறப்படுத்தப்போகுமாறு 3 முதல் 5 பிரதிவாதிகளிடம் கேட்டு வந்த போது அகற்றிப்போவதாக வீண் புகல் சொல்லி நாட்களை கடத்தி வருகிறார்கள் என்றும்,

1ம் வாதியின் தாயார் சீனியம்மாள் கடந்த 2023ம் ஆண்டு மார்ச் மாதம் கீழே விழுந்து வலது கை முறிவு ஏற்பட்டதினால் மருத்துவ சிகிச்சைக்காக வாதிகள் கேரளா மாநிலம் வால்பாறை சென்று சிறிதுகாலம் 1ம் வாதியின் தாயாருடன் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதினை 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 1,2 பிரதிவாதிகளையும் தங்களுடன் சேர்ந்து கொண்டு 2 மற்றும் 3 வது தபசில் சொத்துக்களுக்கு சேர்ந்தரணையாக 4ம் தபசில் சொத்தின் தென்பக்கம் கிழமேலாக அமைந்திருந்த முள்வேலியை உடைத்துவிட்டு 1,2 பிரதிவாதிகள் கடந்த 2023ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் தபசில் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து 1ம் தபசில் சொத்திலுள்ள கட்டுமானங்களை கட்டியுள்ளார் என்றும், வாதிகள் தற்செயலாக ஊருக்கு வந்தபோதுதான் கட்டுமான விபரங்கள் வாதிகளுக்கு தெரிய வந்தது என்றும் பிரதிவாதிகளை வாதி நேரில் சந்தித்து 1 முதல் 3 தபசில் சொத்துக்களில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து சட்டவிரோதமாக கட்டியுள்ள கட்டுமானங்களை அப்புறப்படுத்திப் போகுமாறு கேட்டதில் பிரதிவாதிகள் வீண் புகல் சொல்லி வருகிறார்கள் என்றும் எனவே, பிரதிவாதிகளின் மீது 1ம் வாதி சாம்பவர்வடகரை காவல்நிலையத்தில்

கடந்த 30.07.2023 அன்று புகார் செய்தார் என்றும் 3,4 பிரதிவாதிகள் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு 3ம்தபசில் சொத்தில் வீண் பாத்தியதை ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் 3ம் தபசில் சொத்தைப் பொறுத்து 4ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 03.03.2023 அன்று மோசடியாக ஒரு ஆவணத்தினை உற்பத்தி செய்து கொண்டுள்ளனர் என்றும் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 25.09.2013 தேதியிட்ட 1,2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.3 ஆகவும், 05.03.2013 தேதியிட்ட 3ஆம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.4 ஆகவும், 22.03.2013 தேதியிட்ட 5ஆம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே, வாதிகளால் பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

7. வழக்குரை நகல் இணைத்து பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பின்னர் வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகிய போதிலும் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்பு அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அழைத்தும் ஆஜராகவில்லை. எனவே, பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

8. பிரதிவாதிகளுக்கு வழக்குரை நகல் இணைத்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, வழக்குரை சங்கதிகள் பிரதிவாதிகளுக்கு நன்கு தெரிந்துள்ளது. இருப்பினும் வழக்குரை சங்கதிகளை மறுத்துரைக்க பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளித்து ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. தபசில் சொத்து வாதிகளுக்குப் பாத்தியப்படவில்லை என்றோ பிரதிவாதிகள் தபசில் சொத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றோ எடுத்துரைக்கவில்லை. எனவே, வாதியின் வழக்குரை சங்கதிகள் வா.சா.1ன் சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுகிறது. எனவே, வாதிகளின் வழக்கு கோரிக்கை வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதென முடிவு செய்து, அவ்வாறாக இந்தபிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் வாதிகளுக்குப் பாத்தியப்பட்டதென விளம்புகை செய்து, பிராது 1ம் தபசில் சொத்தில் 1,2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டுமானங்களை 1,2 பிரதிவாதிகள் இடித்து அப்புறப்படுத்தி 1ம் தபசில் சொத்தின் அடி மனை அனுபவத்தினை வாதிகள் வசம் ஒப்படைத்துப்போக வேண்டுமென சுவாதீன பரிகாரம் வழங்கியும், பிராது 2ம் தபசில் சொத்தில் 3ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டுமானங்களை 3ம் பிரதிவாதி இடித்து அப்புறப்படுத்தி 3ம் தபசில் சொத்தின் அடி மனை அனுபவத்தினை வாதிகள் வசம் ஒப்படைத்துப்போக வேண்டுமென சுவாதீன பரிகாரம் வழங்கியும், பிராது 3ம் தபசில் சொத்தில் 5ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டுமானங்களை 5ம் பிரதிவாதி இடித்து அப்புறப்படுத்தி 3ம் தபசில் சொத்தின் அடி மனை அனுபவத்தினை வாதிகள் வசம் ஒப்படைத்துப்போக வேண்டுமென சுவாதீன பரிகாரம் வழங்கியும், வாதிகளுக்கு பிரதிவாதிகள் வழக்கின் செலவுத்தொகையை செலுத்த வேண்டுமென உத்தரவிட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரிடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06ம் தேதியன்று திறந்த வழக்கரங்கில் அவையறியப் பகரப்பட்டது.

RAJESH KUMAR Digitally signed by RAJESH KUMAR Date: 2024.12.06 18:38:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.

**வாதிகள் தரப்பு சாட்சி**

வா.சா.1 மாரியம்மாள்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.11.2012 | வாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் – கணிணி வழி நகல் |
| வா.சா.ஆ.2 | 11.04.2022 | 2 ஆம் வாதி பெயரில் ஏற்பட்ட கூட்டு பட்டா – சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 25.09.2013 | 1,2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் – கணிணி வழி நகல் |
| வா.சா.ஆ.4 | 05.03.2013 | 3 ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் – கணிணி வழி நகல் |
| வா.சா.ஆ.5 | 03.03.2023 | 4 ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் – கணிணி வழி நகல் |
| வா.சா.ஆ.6 | 22.03.2023 | 5 ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் – கணிணி வழி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

RAJESH KUMAR

Digitally signed by RAJESH KUMAR
Date: 2024.12.06 18:38:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.

மு.மா.உ.நீ.ம.தென்காசி
அசல் வழக்கு எண்.308/2023
நேரிய/வரைவு தீர்ப்புரை
06.12.2024